தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பெற்றது.

(ஈ) மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகிறது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் மூலம் மாநகராட்சி மற்றப் பகுதிகளுக்கு மட்டும் வரிவிதிப்பு செய்வதன்மூலம் இந்த அரசுக்கு எவ்வளவு ரூபாய் கிடைக்கப் போகிறது என்பதையும் அதன்மூலம் பல்வேறு நல்ல பணிகளைச் செய லாக்குவதற்கு இந்த வரியின் மூலம் கிடைக்கிற தொகையை எந்த வகையில் பயன்படுத்தப் போகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாநகராட்சி மற்றப் பகுதிகளில் ஓட்டுகிற வாகனங்களுக்கு இப்படி ஒரு கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்பது வரவேற்கத் தக்க ஒன்றாகும். அந்த வகையில் போக்குவரத்துக் கழகங்களுக்கு விதிக்கப்படுகிற இந்த வரிகள் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களின் வளர்ச்சிக் காகச் செலவிடப்படுகிற நிலையில், மக்கள் எந்தளவிற்கு இன்னல்களை ஏற்றிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான் பல்வேறு நல்ல காரியங்களை எல்லோரும் பாராட்டுகிற அளவிற்கு, மிகச் செம்மையாக, சிறப்பாக ஆற்றியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும், பல்வேறு போராட்டங்களை, பல்வேறு பிரச்னைகளை சந்திக்க வேண்டிய நேரங்களிலெல்லாம் திறமையான முறையில் மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு திறமையான நிர்வாகத்தை நடத்துவதன்

* 1979, பிப்ரவரி 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மூலமாக மற்றவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு அவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வரிவிதிப்பின் மூலம் அரசு நல்ல வருவாயைத் தேடுவதோடு அதே நேரத்தில் யாரும் பாதிக்கப்படாத அளவிற்கு, யாருக்கும் துன்பம் ஏற்படாத அளவிற்கு, சிறப்பான முறையில் இந்த வரி விதிப்பை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்ற வகையில் இந்தச் சட்டத்தை நான் ஆதரித்து என் உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நெடுஞ்சாலைத் துறையும் போக்குவரத்துத் துறைகளும் ஒன்றாக இணைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் குறிப்பாக கிராமப்புறங்களில் எங்கெங்கு பேருந்து வசதிகள் இல்லை எங்கெங்கு சாலை வசதிகள் இல்லை, எங்கெங்கு குறைந்த அளவிற்குத்தான் பேருந்துகள் ஓடுகின்றன என்பனபற்றி ஆய்வு செய்ய உத்தரவிட்டு அரசு அதன் அடிப்படையில் ஒரு ஆய்வு செய்தது. குறிப்பாக பஞ்சாயத்து ஆன்ட் பஞ்சாயத்து ஒன்றியக் சாலைகள் என்று சொல்லப்படுகிற சாலைகளில், பஞ்சாயத்துச் களுக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும் நிதிநிலை நல்ல முறையில் இல்லாத காரணத்தால், இந்தச் சாலைகளை செப்பனிடக்கூட முடியாத சூழ்நிலையில், ஓடுகிற பேருந்துகள் கூட அவ்வப்போது நின்றுவிடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வந்தது. அந்நிலையை மாற்றியமைக்க, அந்தச் சாலைகளைப் பயன்படுத்துகிற பேருந்துகள் நஷ்டத்தை அதிகம் சந்திக்காமல் சாலைகள் செம்மையாக இல்லாத காரணத்தால், வேர் ஆன்ட்டேர் போன்ற இன்னல்களுக்கு ஆட்பட்டு நட்டம் ஏற்படாமலிருக்குமுகத்தான் சாலைகளைச் செப்பனிட நாட்டு டைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்கள் அவற்றின் லாபத் தொகையில் ஒரு பகுதியை சாலைகள் மேம்பாட்டிற்காக ஒதுக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்தது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு ஏழு போக்குவரத்துக் கழகங்கள் நல்ல முறைகளை ஏற்படுத்தியதன் காரணமாக 'மெட்டீரியல் மானேஜ்மென்ட்,' ப்யூயல் எக்காணமி, போன்ற விஞ்ஞான ரீதியான ஏற்பாடுகளைச் செய்ததன் காரணமாகவும் பல போக்கு வரத்துக் கழகங்கள் நஷ்ட நிலையினின்று மாறி, இன்று பாரதத்திலேயே தமிழ்நாட்டில்தான் ஏழு போக்குவரத்துக் கழகங்கள் முதன் முறையாக ஒட்டுமொத்தமாக ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் ஆதாயம், நிகர லாபம் சம்பாதித்திருக்கிறது.

[முற்பகல் 11.50]

அந்த லாபத்தின் ஒரு பகுதியை சாலை மேம்பாட்டுக்காக பயன் படுத்தவேண்டும் என்கின்ற அளவில் 700-க்கு குறைவாக இருக்கின்ற போக்குவரத்து நிறுவனங்களுக்கு 40 சதவிகிதமும்,

1979 மார்ச் 14] [திரு. சி. பொன்னையன்]

700-க்கு அதிகமான பேருந்துகள் உள்ள நிறுவனத்திற்கு 66 சதவிகிதம் என்றும் கூடுதல் வரி விதிக்கவேண்டும் என்ற முறையில் முடிவு எடுத்து அதை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. இந்த கூடுதல் வரியின் மூலமாக 6,86,09,000 ரூபாய் உபரியாக கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் விதிக்கப்படுகின்ற உபரி வரி இந்த ஆண்டுக்கு மட்டும் தற்போதைக்கு விதிக்கப்படுகிறது. மேலும் டீஸல் ஆயில் போன்றவைகளுக்கும் போக்குவரத்து பேருந்துகளுக்கு பயன்படுத்தப்படும் சாதனங்களுக்கும் மத்திய அரசு போடுகின்ற அதிக வரி காரணமாக—இனிமேல் வருகின்ற ஆண்டுகளில் அந்தந்த நிதிநிலைமைகளுக்கு ஏற்ப இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் இராதா அவர்கள் கேட்டார்கள். இந்த நிதி சாலை போக்குவரத்துக் கழகங்களுக்கு மட்டுமே பயன்படவேண்டும், வேறு எதற்கும் செலவு செய்யக்கூடாது என்று சுட்டிக்காட்டினார்கள். நான் குறிப்பிட விரும்புவது, இந்த மேல்வரியின் மூலமாக கிடைக்கும் தொகையின் பெரும் பகுதி சாலை மேம்பாட்டுக்கும், பயணிகளின் வசதிகளுக்கும் பயன்படுத்தப்படும். வேறு எதற்கும் இந்த உபரி நிதி பயன்படுத்தப்பட மாட்டாது என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, பேருந்துகள் செல்லுகின்ற சாலைகளுக்கு இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு, அத்துடன் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு உறுதிமொழியையும் அளிக்க விரும்புகிறேன். இந்த கூடுதல் வரி விதிப்பின் காரணமாக, போக்குவரத்து நிறுவனங்களின் ஆதாயம் குறையத்தான் செய்யும், இந்த நிலைமையில் போனஸ் பகிர்ந்து கொடுப்பதும் குறையவே செய்யும். என்றாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துக் கழகங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு இந்த மேல்வரி விதிக்கப்படாமல் இருந்த நேரத்தில் எந்த அளவுக்கு போனஸ் பெற்றிருக்கிறார்களோ அந்த அளவுக்கு இப்போதும் போனஸ் தொகை குறையாது. குறைந்த அளவுக்கு போனஸ் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் கருணையின் அடிப்டையிலும் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: பேரவை முன்னுள்ள கேள்வி— ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—"பிரிவு 4 இச்சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்.

In Clause 4, for the expression "in one lump sum within such period, not being less than seven days or more than thirty days from the date of publication of this Act in the Tamil Nadu Government Gazette as may be prescribed." substitute the expression "in four equal monthly instalments on or before the last day of each of the four months immediately following the date of publication of this Act in the Tamil Nadu Government Gazette."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1979) திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற வேண்டும்." எனகோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.